உ
சிவமயம்



வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ வேண்டி என்னைப்பணி கொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய் யானுமதுவே வேண்டி னல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே.

- மாணிக்கவாசகர் -

திருச்சிற்றம்பலம்

# காரைநகர் மணிவாசகர் சபை

## 73, 74 ஆவது ஆண்டறிக்கையும் வரவுசெலவுக் கணக்கு விபரமும்

## 1-07-2012- 30-06-2014

# காரைநகர் மணிவாசகர் சபையின் 73, 74 ஆவது ஆண்டறிக்கை

சிவநேயச் செல்வர்காள்!

ஈழத்துச் சிதம்பரத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஆண்டிகேணி ஐயனாரினதும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேச பெருமானினதும் திருவருட் கடாட்சத்தினால் காரைநகர் மணிவாசகர் சபையின் 73, 74 ஆம் ஆண்டறிக்கையும் வரவு செலவு அறிக்கைகளையும் சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

யோகர் சுவாமியின் ஆசியுடன் கலாநிதி சிவஸ்ரீ. க. வைத்தீசுவரக் குருக்களால் 01.01.1940 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பெற்ற இச்சபை 1955 ஆம் ஆண்டு தொடக்கம் திருவெம்பாவைக் காலத்தில் ஈழத்து சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் மணிவாசகர் விழாவை தொடர்ந்து எத்தகைய தடங்கலும் இன்றி இடம்பெயர்ந்த காலத்திலும் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோவில், சித்தங்கேணி சிவன் கோயில், நல்லைஆதீனம் போன்ற இடங்களில் நடத்தி வந்ததை நீங்கள் அறிவீர்கள் அத்துடன் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பண்ணிசை, பஜனை, பேச்சு, மனனம் ஆகிய போட்டிகளையும் மணிவாசகர் குருபூசையை முன்னிட்டு திருவாசகப் போட்டி களையும் மணிவாசகர் விழாவை முன்னிட்டு சைவ சமய பரீட்சைகளையும் ஆண்டு தோறும் நடத்தி வருகின்றோம்.

58 ஆவது ஆண்டு மணிவாசகர் விழா மாலை 02.00 மணிக்கு மணிவாசகர் திருவுருவப்படமும், திருவாசக திருமுறையும், விழா ஊர்வலத்துடன் 25-12-2012 அன்று நல்லை ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தர் பரமாச்சாரியார் சுவாமிகளால் ஆரம்பிக்கப் பெற்று மூன்று தினங்கள் நடைபெற்றன. 1 ஆம் நாள் நிகழ்ச்சியில் வலந்தலை தெற்கு அ.மி. த.க பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் " மாம்பழம்" எனும் வில்லிசையும் செல்வி. வைஷ்ணவி குமாரசேகரம் அவர்களின் சிவநடனமும் நடைபெற்றன. " தித்திக்கும் சிவபதம் " எனும் தலைப்பில் ஆசிரியர் சிவத்திரு. கு. பாலஷண்முகன் M.A அவர்களும் "விளைந்தது பூசல்" எனும் தலைப்பில் தமிழ் நாட்டைச் சேர்ந்த சித்தாந்த இரத்தினம், கம்பன் கவிச்செல்வர் புலவர் மாமணி ச. அருணசடேசன் (M.phil) என்ற தலைப்பிலும் சொற்பொழிவு ஆற்றினார். தொடர்ந்து சபை நடாத்திய சைவ சமய பரீட்சையில் முதன்மை சித்தி பெற்ற ஐந்து மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களும் ஐம்பது மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பெற்றன.

2 ஆம் நாள் நிகழ்ச்சியில் "நானும் தானும்" எனும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக முன்னாள் ஆங்கில போதனாசிரியர் செஞ்சொற்செம்மல் ச. விநாயகமூர்த்தி B.A அவர்களும், " என்னை விடுதி கண்டாய் " எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் செந்தமிழ் சொல் அருவி ச. லலீசன் அவர்களும் "அகல ஆண்டாய்" எனும் தலைப்பில்

தமிழகத்திலிருந்து வருகைதந்த ச. அருணசடேசன் அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். சபை நடத்திய சமய பாடப்பரீட்சையில் அதிவிசேட திறமைச்சித்தி பெற்ற மாணவர்களுக்கு, புற்றுநோய் வைத்தியநிபுணர் வைத்திய கலாநிதி ந. ஜெயக்குமார் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார்.

3 ஆம் நாள் நிகழ்ச்சியில் காரைநகர் கிழவன் காடு கலாமன்றத்தின் இசைக்கச்சேரியும் " நான்நின் அடியேன் " எனும் தலைப்பில் காரைநகர் மணிவாசகர் சபை முன்னாள் செயலாளர் சிவநெறிச் செல்வர் ஆ. செந்தில் நாதன் அவர்களும் " வானவரும் அறியா மலர்பாதம் " எனும் தலைப்பில் கம்பன் கவிச்செல்வர் ச. அருணசடேசன் அவர்களும் சொற்பொழிவு ஆற்றினார்கள்.
இன்னிசையில் செல்வி அமிர்தா ஆனந்தராசா பாட்டு, செல்வி மதுரா சிவராசா வயலின், செல்வன் மதுஷன் சிவராசா மிருதங்கம் ஆகியோர் பங்குபற்றிச் சிறப்பித்தனர். " உள்ஒளி பெருக்கும் " எனும் தலைப்பில் வாகீச கலாநிதி நாகேஸ்வரன் ( M.A. PhD ) அவர்கள் சங்கீத கதாபிரசங்கம் ஆற்றினார்கள். அணிசெய் கலைஞர்களாக மிருதங்கம் கலாவித்தகர் தி. சண்முகசுந்தரம் அவர்களும் வயலின் கலைஞானி S. பத்மநாதன் அவர்களும் சிறப்பித்தனர்.

2012 ஆம் ஆண்டு திருவெம்பாவைக் காலத்தில் இலங்கை முழுவதும் கடுமையான மழை காரணமாக யாழ்ப்பாணம், கொழும்பு போக்கு வரத்தும் தடைப்பட்ட நிலையில் இருந்தது அச்சமயம் தமிழகப் பேச்சாளர் யாழ்ப்பாணம் வந்து கொழும்பு செல்ல முடியாமல் கஷ்டப்பட்ட போது திருமதி விஜயகலா மகேஸ்வரன் ( பா.உ ) அவர்களின் உதவியுடன் விமானம் மூலம் போக்குவரத்து ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டது.

2013- 12- 15 ஆம் நாள் 59 ஆவது ஆண்டு மாணிவாசகர் விழா வழமை போன்று மாலை 02.00 மணிக்கு மணிவாசகர் திருவுருவப்படமும் திருவாசகத் திருமுறையும் ஊர்வலத்துடன் ஆரம்பமாகியது. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் பரமச்சாரியார் சுவாமிகள் விழாவை ஆரம்பித்து வைத்தார். செல்வி இ. சுருதி, செல்வி வைஷ்ணவி ஆகியோரின் சிவநடனத்தைத் தொடர்ந்து பண்ணிசை,பேச்சு மனனப் போட்டியில் முதன்மை பெற்ற மாணவர்களினது நிகழ்ச்சியும் நடைபெற்றது.
" மாற்றமாம் வையகத்தின் " எனும் தலைப்பில் சின்மய மிஷன் பிரம்மச்சாரி யாக்கிரத சைதன்யா சுவாமிகளின் சிறப்பு சொற்பொழிவும் நடைபெற்ற பின்னர் சைவ சமய பாடப்பரீட்சையில் முதன்மை சித்திபெற்ற ஐந்து மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களும் ஐம்பது மாணவர்களுக்கு பரிசில்களையும் வாழ்நாள் பேராசிரியர் வே. தர்மரெட்ணம் அவர்களால் வழங்கப்பெற்றன.

2 ஆம் நாள் நிகழ்ச்சியில் பேச்சு, பண்ணிசைப் போட்டியில் முதன்மை பெற்றவர்களின் நிகழ்ச்சியும், களபூமி கலையரங்க மாணவர்களின் குழுப்

பண்ணிசையும் " இமைப்பொழுதில் என்நெஞ்சில் " என்னும் தலைப்பில் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் பேராசிரியர் S.சிவலிங்கராசா அவர்கள் தலைமையில் "திருவாசத்தேன்" என்னும் கருத்தரங்கும் நடைபெற்றது.

"எல்லாப் பிறப்பும் "– தமிழருவி திரு. த. சிவகுமாரன்
"பால்நினைத்து ஊட்டும் "– சிவத்திரு ச. லலீசன்
"ஆர்க்கெடுத்துரைப்பேன் "– சிவத்திரு. கு. பாலஷண்முகன்

ஆகியோர் கருத்துரை வழங்கினர். வைச சமய பரீட்சையில் விசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

3 ஆம் நாள் நிகழ்ச்சியில் காரைநகர் கிழவன் காடு கலாமன்ற மாணவர்களின் இன்னிசைக் கச்சேரியும், பேச்சு, பண்ணிசையில் முதன்மை பெற்ற மாணவர்களின் நிகழ்ச்சியும் காரை மெய்கண்டான் வித்தியாலய மாணவர்களின் கும்மி நிகழ்வும், யாழ்ரன் கல்லூரி மாணவி செல்வி ம. நவநிலாவின் " திருவாசகத்தின் சிறப்பு" எனும் பேச்சும் தாமே தமக்கு சுற்றமும், தாமே தமக்கு விதி வகையும் எனும் தலைப்பில் சின்மயா மிஷன் பிரம்மச்சாரி யாக்கிரத சைதன்ய சுவாமிகளின் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெற்றன. திருமதி. கண்ணதாசன் ஸ்ரீதேவி அவர்கள் தயாரித்து வழங்கிய "கானவன் வந்து வெளிப்படும் ஆயிடிலே" எனும் நிர்த்தியார்ப் பணமும் நடைபெற்று திருவாசகத் திருமுறையுடன் 59 ஆம் ஆண்டு மணிவாசகர் விழா இனிதே நிறைவு எய்தியது.

இவ்விருவருட காலத்திலும் மணிவாசகர் விழாவை ஆரம்பித்து வைத்த நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் பாதரவிந்தங்களைப் பணிந்து உளம் கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். விழாவில் சொற்பொழிவு ஆற்றி அறிஞர் பெருமக்களுக்கும், கலை நிகழ்வுகளைத் தந்த மாணவச்செல்வங்களுக்கும் சபையின் உளம் நிறைந்த பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பரீட்சையில் பங்குபற்றி மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு தங்கப்பதக்கங்களை வழங்கிய " எனது ஊர் காரைநகர் " சஞ்சிகை ஆசிரியர் திரு. தி. பிரமேந்திரதீசன் அவர்களுக்கும், திருவாசகப் போட்டியை நடத்த உதவிய லண்டன் காரை அபிவிருத்திச் சங்கத்தலைவர் ப. தவராசா அவர்களு க்கும் மணிவாசகர் விழா பேச்சு, மனனம், பண்ணிசைப் போட்டி மணிவாசகர் பரீட்சை போன்றவற்றை சிறப்புற நடாத்த உதவிய கனடா கலாசார மன்றம் மற்றும் வெளியூர் உள்ளூர் நல்எண்ணம் கொண்டு நிதி உதவி செய்த பெருந்தகைகளுக்கும் சபை என்றும் நன்றிக் கடன் உடையதாக விளங்கு வதோடு எம்பெருமானின் கடாட்சம் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

சமயபாட பரீட்சை, பேச்சு, மனனம், பண்ணிசைப் போட்டி, திருவாசகப் போட்டி போன்றவற்றை ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடாத்த உதவிய காரைநகர் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், தொண்டர்கள், பரீட்சை நோக்குனர்கள், வினாத்தாள் தயாரித்தவர்கள், விடைத்தாள் திருத்தியவர்கள், நடுவர்களாக இருந்தவர்கள், மத்தியஸ்தம் வகித்த காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் சபையின் நன்றியை தெரிவிப்பதுடன் ஆண்டவனின் அருளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

விழாக்களை நடாத்துவதற்கு ஆதரவு வழங்கும் ஈழத்து சிதம்பர ஆதீனகர்த்தாக்களுக்கும் அபிஷேகம் குருபூஜை செய்தும் ,ஆசியும் வழங்கிய சிவசிவாச்சாரியார்களுக்கும் சபையின் சார்பில் சிரம் தாழ்த்தி நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழகப் பேச்சாளர் அருண்சடேசன் அவர்களை வரவேற்று உபசரித்து மீண்டும் தமிழகம் அனுப்ப உதவிய திரு. க. ஜெகதீசன் ( கொழும்பு ) அவர்களுக்கும் தமிழகப் பேச்சாளர் யாழ்ப்பாணம் வந்து போக உதவிய திருமதி. விஜயகலா மகேஸ்வரன் (பா .உ) அவர்களுக்கும் சபையின் நன்றியைத் தெரிவிப்பதோடு இறைவனின் இன்னருள் கிடைக்க வேண்டு கின்றோம். கணக்குகளை பரிசோதித்துத் தந்த திரு. வே. உருத்திரசிங்கம் **B.Com** அவர்களுக்கும் சபைக்கு சகல வகையிலும் நல்லாதரவும் உதவியும் புரிந்த யாவர்க்கும் பரம்பொருளின் கருணைக்கு பாத்திரமாக வேண்டும் என்று பிரார்த்தித்து அமைகின்றோம்.

மேன்மேலும் மணிவாசகர் சபையின் பணிகள் சிறந்து விளங்கவும், எதிர்வரும் பவளவிழா ஆண்டு சிறப்பாக அமையவும் திண்ணபுரத்தானின் திருவருளும் தங்கள் அனைவரினதும் பேரன்பும் பேராதரவும் வேண்டி நிற்கின்றோம்.

*இங்ஙனம்*

**து.நாகேந்திரன்**

**செயலாளர்**

# காரைநகர் மணிவாசகர் சபை
# செயற்குழு

**தலைவர்**
பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை

**துணைத் தலைவர்கள்**
திரு. க.தில்லையம்பலம் ஆசிரியர்,
திரு. க. பாலசுப்பிரமணியம்

**செயலாளர்**
திரு.து. நாகேந்திரன்

**துணைச்செயலாளர்**
திரு. சு. அகிலன்

**பொருளாளர்**
திரு. ந. பாரதி

**துணைப்பொருளாளர்**
திரு. வே. சிவகுருநாதன்

**பரீட்சைச் செயலாளர்**
திரு. க. நேத்திரானந்தன்

**உறுப்பினர்கள் :**
திரு. செ. இராமுப்பிள்ளை
திரு. சு. விசுவலிங்கம்
திரு. ப. ஐங்கரன்
திரு. தி. சண்முகசுந்தரம்
திரு. க. நேத்திரானந்தன்
திரு. க. சிவஸ்ரீ சாந்திநாயகம்
திரு. சபாலிங்கம்

**காப்பாளர்கள் :**
பண்டிதர் கலாநிதி க. வைத்தீசுவரக்குருக்கள்
பேராசிரியர் இ. கனகசுந்தரம்
திரு.தி. விசுவலிங்கம்

## காரைநகர் மணிவாசகர் சபை
## 1-07-2012- 30-06-2013 வரையிலான
## கணக்கு விபரம்

| வருமானங்கள் | தொகை |
|---|---|
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு | 4712 . 26 |
| கிராமிய வங்கி சேமிப்புக் கணக்கு | 459 . 03 |
| நிலையான வட்டி வரவு 1 | 9024 .65 |
| நிலையான வட்டி வரவு 2 | 4524 .65 |
| கிராமிய வங்கி வட்டி | 24.93 |
| சைவசமய பாட பரீட்சை கட்டணம் | 19050.00 |
| திருமதி.விஜயகலா மகேஸ்வரன் பா.உ | 50.000.00 |
| திரு.தி. பிரமேந்திரதீசன் -கனடா | 50.000.00 |
| லண்டன்- காரை நலன்புரிச்சங்கம் | 50.000.00 |
| லண்டன்- காரை நலன்புரிச்சங்கம் | 20850.00 |
| திரு.ஆ. செந்தில்நாதன்- சுவிஸ் | 40.000.00 |
| கனடா. காரை கலாசாரமன்றம் | 25.000.00 |
| சரவணாரெக்ஸ் நல்லூர் | 15.000.00 |
| திரு. செ.சிவானந்தன் -சடையாளி | 10.000.00 |
| திரு.ப.சிவசுப்பிரமணியம் மல்லிகை | 10.000.00 |
| திரு. இ. ஜெயராசா S.M கேணியடி, காரைநகர் | 10.000.00 |
| திரு. சி.கோபாலகிருஷ்ணன் பிரான்ஸ் | 10.000.00 |
| திரு.ச.சிவகுமரன் சிவன் மோட்டார்ஸ் யாழ்ப்பாணம் | 10.000.00 |
| கஜமுகன் காட்வெயர் ஸ்ரோர்ஸ் காரைநகர் யாழ்ப்பாணம் | 7500.00 |
| திருமதி ஆர்.ராதா நடுத்தெரு | 6850.00 |
| திரு.ந.யோகநாதன் பழையகண்டி | 5000.00 |
| திரு.சி. சுந்தரேஸ்வரன் சுன்னாகம் | 5000.00 |
| திரு.வே. அருளம்பலம் | 2000.00 |
| சிங்கப்பூர் ஜீவல்லரி யாழ்ப்பாணம் | 2000.00 |
| திரு.செ.இராமுப்பிள்ளை வேம்படி காரைநகர் | 2000.00 |
| திரு. அ.சுப்பிரமணியம் சடையாளி காரைநகர் | 2000.00 |
| திரு.சு.ஞானேஸ்வரன் சடையாளி காரைநகர் | 2000.00 |
| திரு.ந.அருள்ராசன் சடையாளி காரைநகர் | 2000.00 |
| திரு.த.தயாபரன் சந்தப்புளியடி காரைநகர் | 2000.00 |
| திரு.சு.செல்வரத்தினம் சுன்னாகம் | 1000.00 |
| | 377995.52 |

1-07-2012- 30-06-2013 வரையிலான

கணக்கு விபரம்

| செலவீனங்கள் | ரூபா.ச | ரூபா.ச |
|---|---|---|
| **கடந்த ஆண்டு சென்மதி** | | 15.845.21 |
| **71,72 ஆவது ஆண்டு அறிக்கை அச்சு கூலி** | | 4700.00 |
| **சமயபாடப்பரீட்சை செலவுகள்** | | |
| விண்ணப்பபப்படிவம் வினாத்தாள் | 16895.00 | |
| உபசரணை ,காகிதாதிகள் | 3769.00 | |
| பரிசுப்புத்தகங்கள் | 17180.00 | |
| 5தங்கப்பதக்கங்கள் | 32000.00 | 69.844.00 |
| **மணிவாசகர் விழா** | | |
| அழைப்பிதழ், பனர், உபசரணை | 3540.00 | |
| மணிவாசகர் ஊர்வலம் | 3000.00 | |
| திருவாவடுதுறை ஆதீன வெளியீடு | 2300.00 | |
| உள்ளூர் பேச்சாளர் போக்குவரத்துச் செலவு | 14000.00 | |
| தமிழக பேச்சாளர் போக்குவரத்துச் செலவு | 54680.00 | |
| அதிகாலை திருவெம்பாவைஓதல் செலவு | 12100.00 | 89620.00 |
| **பண்ணிசை பேச்சு மனனப்போட்டிகள்** | | |
| அச்சுச்செலவு, உபசரணை மத்தியஸ்தர் | | |
| போக்குவரத்து | 5530.00 | |
| பரிசுகள் | 10810.00 | 16340.00 |
| சிவராத்திரி 4ம் சாம அபிஷேகம் | | 10111.00 |
| **திருவாசகப்போட்டி** | | |
| மனனம் செய்ய திருவாசக புத்தகங்கள் | 15000.00 | |
| உபசரணை பேச்சாளர் போக்குவரத்து | 2300.00 | |
| பரிசுகள் | 20355.00 | 37.655.00 |
| மணிவாசகர்குருபூஜை | | 5000.00 |
| மணிமண்டபம் முன்பந்தி வேலை | | 40.075.00 |
| **பொதுச்செலவுகள்** | | |
| தட்டச்சுபிரதி எடுத்தல் | 1015.00 | |
| தேர் அர்ச்சனை ஆடி, மார்கழி பங்குனி | 2985.00 | |
| க.வைத்தீஸ்வரக்குருக்கள் பிறந்தநாள் வாழ்த்து | 10472.00 | 14472.00 |
| **இலங்கைவங்கி இருப்பு** | | 70566.56 |
| **கிராமிய வங்கி** | | 483.96 |
| **காசு கையிருப்பு** | | 3282.79 |
| | | 377.995.52 |

## காரைநகர் மணிவாசகர் சபை
## 1-07-2013- 30-06-2014 வரையிலான
## கணக்கு விபரம்

| வருமானங்கள் | தொகை |
|---|---|
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு | *70566.56* |
| காசு கையிருப்பு | *3282.79* |
| கிராமிய வங்கி இருப்பு | *483.96* |
| சைவசமய பாட பரீட்சை கட்டணம் | *16290.00* |
| நிலையான வட்டி வரவு 1 | *12568.49* |
| நிலையான வட்டி வரவு 2 | *6250.00* |
| கிராமிய வங்கி வட்டி | *21.50* |
| கனடா. காரை கலாசாரமன்றம் | *50.000.00* |
| திரு.தி. பிரமேந்தரதீசன் - கனடா | *50.000.00* |
| திரு.ஆ. செந்தில்நாதன் -சுவிஸ் | *25.000.00* |
| லண்டன்- காரை நலன்புரிச்சங்கம் | *20.000.00* |
| | *254.463.30* |

**1-07-2013- 30-06-2014 வரையிலான**
**கணக்கு விபரம்**

| செலவீனங்கள் | ரூபா.ச | ரூபா.ச |
|---|---|---|
| **சமயபாடப்பரீட்சை செலவுகள்** | | |
| விண்ணப்பப்படிவம் வினாத்தாள் | 12690.00 | |
| உபசரணை காகிதாதிகள் | 2943.00 | |
| பரிசுப்புத்தகங்கள் | 13376.00 | |
| தங்கப்பதக்கங்கள் -ஐந்து | 39900.00 | 68.909.00 |
| **மணிவாசகர் விழா** | | |
| அழைப்பிதழ், பனர், உபசரணை | 5250.00 | |
| மணிவாசகர் ஊர்வலம் | 2500.00 | |
| உள்ளூர் பேச்சாளர் போக்குவரத்து | 16300.00 | |
| அதிகாலை திருவெம்பாவைஓதல் செலவு | 14700.00 | |
| நிர்த்தியார்பணம் (நடனம் ) | 15000.00 | 53750.00 |
| **பண்ணிசை பேச்சு மனனப்போட்டி** | | |
| அச்சுச்செலவு, உபசரணை, மத்தியஸ்தர் | 12113.00 | |
| பரிசுகள் | 21570.00 | 33683.00 |
| சிவராத்திரி 4ம் சாம அபிஷேகம் | | 11327.00 |
| **திருவாசகப்போட்டி** | | |
| மனனம் செய்ய திருவாசக புத்தகங்கள் | 8700.00 | |
| உபசரணை பேச்சாளர் போக்குவரத்து | 4281.00 | |
| பரிசுகள் | 15910.00 | 28891.00 |
| மணிவாசகர்குருபூஜை | | 6040.00 |
| **பொதுச்செலவுகள்** | | |
| தட்டச்சுபிரதி எடுத்தல் | 3000.00 | |
| க.வைத்தீசுவரக்குருக்கள் பிறந்தநாள் வாழ்த்து | 12922.00 | |
| தேர் அர்ச்சனை | 1090.00 | 17012.00 |
| **இலங்கைவங்கி இருப்பு** | | 20925.05 |
| **கிராமிய வங்கி** | | 505.46 |
| **காசு கையிருப்பு** | | 13420.79 |
| | | 254.463.30 |

***இங்ஙனம்***
**ந. பாரதி**
**பொருளாளர்**
V. **உருத்திர சிங்கம் ஓழற்றர் 01.10.2014**

**நிதி நிலைக்கூற்று**

| | |
|---|---|
| **நிலையான வைப்பு** | **250, 000.00** |
| **இலங்கை வங்கி இருப்பு** | **20925.05** |
| **கிராமிய வங்கி இருப்பு** | **505.46** |
| **காசு கையிருப்பு** | **13420.79** |
| | **284,851.30** |

*அச்சுப்பதிப்பு பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்*